# <u>கூடுதல்      மன்றப்பொருள்</u>

**பொருள் : 1**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 17404/2022/எம் – 1 நாள் 10.03.2023 ன் படி வால்பாறை நகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் காலைச் சிற்றுண்டி வழங்க இடங்கள் தேர்வு செய்யப்பட்டு செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது, இதற்கிணங்க வால்பாறை அரசு மேல்நிலைப்பள்ளி, சோலையார் டேம் அரசு மேல்நிலைப்பள்ளி, உருளிக்கல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் வாட்டர்பால்ஸ் அரசு உயர்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் சமுதாய சமையல் கூடம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தலா 36,00 இலட்சம் வீதம் மொத்தம் 144,00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 17404/2022/எம் – 1 நாள் 10.03.2023-ன் படி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடு (இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | வால்பாறை அரசு மேல்நிலைப்பள்ளியில் சமுதாய சமையல் கூடம் கட்டுதல் | 36.00 |
| 2 | வாட்டர்பால்ஸ் அரசு உயர்நிலைப்பள்ளியில் சமுதாய சமையல் கூடம் கட்டுதல் | 36.00 |
| 3 | சோலையார் டேம் அரசு மேல்நிலைப்பள்ளியில் சமுதாய சமையல் கூடம் கட்டுதல் | 36.00 |
| 4 | உருளிக்கல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சமுதாய சமையல் கூடம் கட்டுதல் | 36.00 |

**அலுவலக குறிப்பு ;**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 571 அனுமதிக்கப்படுகிறது.**